ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2490/07 - 2026 මැයි මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.05.28
*2490/07 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

### மாண்புமிகு சனாதிபதி அவர்களினால் செய்யப்படும் கட்டளை

1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டம்

(முத்திரை)

**அநுர குமார திசாநாயக்க**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி, அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கமைய எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இவ்வறிவித்தலின்மூலம் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளை வழங்குவதில் ஈடுபடும் எந்தவொரு அரச கூட்டுத்தாபனம் அல்லது அரச திணைக்களம் அல்லது உள்ளூராட்சி நிறுவனம் அல்லது கூட்டுறவுச் சங்கம் அல்லது அவற்றின் கிளையொன்றினால் வழங்கப்படும் சேவைகள் டிட்வா சூறாவளி காரணமாக ஏற்பட்டுள்ள அனர்த்தத்திற்கு பின்னரான நிலைமைகருதி வழமையான பொதுமக்கள் வாழ்வைக் கொண்டுநடத்துவதற்கு இன்றியமையாததென மற்றும் சொல்லப்பட்ட சேவைகளுக்கு இடையூறாகக்கூடுமென்பதை அல்லது தடையாகக்கூடுமென்பதைக் கருத்திற்கொண்டு எந்தவொரு அரச கூட்டுத்தாபனம் அல்லது அரச திணைக்களம் அல்லது உள்ளூராட்சி நிறுவனம் அல்லது கூட்டுறவுச் சங்கம் அல்லது அவற்றின் கிளையொன்றின்மூலம் வழங்கப்படும் பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சேவைகள் மேற்போந்த பிரிவின் பணிகளுக்காக அத்தியாவசிய சேவைகள் எனக் இக்கட்டளையின்மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

இரண்டாயிரத்து இருபத்தாறாம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி கையொப்பமிடப்பட்டது.

மாண்புமிகு சனாதிபதி அவர்களின் ஆணைப்படி,

**கலாநிதி என்.எஸ். குமாநாயக்க,**
சனாதிபதியின் செயலாளர்.

**அட்டவணை**

1. மின்சாரம் வழங்கல் தொடர்பான சகல சேவைகள்
2. பெற்றோலிய உற்பத்திகள், எரிவாயு உள்ளிட்ட எரிபொருள் வழங்கல் அல்லது விநியோகம்
3. வைத்தியசாலைகள், தாதியர் இல்லங்கள், மருந்தகங்கள் மற்றும் அதுபோன்ற ஏனைய நிறுவனங்களின் நோயாளர்களின் பராமரிப்பு மற்றும் வரவேற்பு, பாதுகாப்பு, போசாக்கூட்டல் மற்றும் சிகிச்சை அளித்தல் ஆகியவை தொடர்பில் அவசியமான அல்லது மேற்கொள்ள வேண்டிய எந்த வகையிலான சகல சேவைகள், வேலைகள் அல்லது தொழில் பங்களிப்பு
4. பயணிகள் அல்லது பொருட்களை கொண்டு செல்வதற்கான பொது போக்குவரத்து சேவைகள்
5. வீதிகள், பாலங்கள், மதகுகள், விமான நிலையங்கள், துறைமுகங்கள் மற்றும் புகையிரத பாதைகள் அடங்கலாக பாதைகள், புகையிரத பாதைகள் அல்லது வான்வழி போக்குவரத்து சேவைகள், சுற்றுலா சேவைகளுக்கான வசதிகளை வழங்குதல் மற்றும் பேணிச் செல்லல்
6. நீர் வழங்கல் மற்றும் வடிகால் தொடர்பான சகல சேவைகள்
7. உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் வழங்கல், பாதுகாப்பு மற்றும் விநியோகம் தொடர்பான சகல சேவைகள்
8. அனைத்து மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள், விவசாய ஆராய்ச்சி உதவியாளர்கள், சமூக வலுவூட்டல் அலுவலர்கள், கிளீன் ஸ்ரீலங்கா குழு அலுவலர்கள் உட்பட அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களின் கள மட்ட அலுவலர்களால் மேற்கொள்ள வேண்டிய அல்லது மேற்கொள்ள அவசியமான எந்தவொரு வகையான அனைத்து சேவைகள், வேலை அல்லது தொழிலாளர் பங்களிப்புகள்.
9. அவசர நோயாளர் காவு வண்டி சேவைகள்
10. இலங்கை மத்திய வங்கி உட்பட அனைத்து அரச வங்கி மற்றும் காப்புறுதி நடவடிக்கைகள்
11. நீர், மின்சாரம், வடிகால் மற்றும் கழிவுநீர் வடிகால் அமைப்புகள், தீயணைப்பு மற்றும் நோயாளர் காவு வண்டி சேவைகள், (கழிவுகளை கொண்டுசெல்லல் மற்றும் அகற்றுதல் உட்பட) கழிவு சுத்திகரிப்பு மற்றும் குப்பைகளை அகற்றுவதற்காக ஏதேனும் உள்ளூராட்சி நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் ஏதேனும் பணிகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் சகல சேவைகள்
12. நீர்ப்பாசனம் தொடர்பான சகல சேவைகள்
13. தொலைபேசி, தொலைத்தொடர்பு மற்றும் ஊடகம் தொடர்பான சகல சேவைகள்
14. தாழ் நிலங்களை மீட்டெடுப்பது மற்றும் அபிவிருத்தி செய்தல் தொடர்பான சகல சேவைகள்
15. விவசாயம் மற்றும் விவசாய காப்புறுதி சேவைகள் தொடர்பான சகல சேவைகள்

EOG 05 - 0237

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.